රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **Combined Services Division**
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | *Independence Square, Colombo 07, Sri Lanka*

දුරකතනය / தொலைபேசி: 011- 2696211-13 / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: 011- 2695279 / Fax
ඊ- මේල් / மின்னஞ்சல்: info@pubad.gov.lk / E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: www.pubad.gov.lk / Web Site

මගේ අංකය / எனது இல / My No: COM/TRANS/V/ஓ.ஸ்.ஓ./2025
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2024.11.22

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**2025 வருடாந்த இடமாற்றக் கட்டளைகளை வழங்குதல்**
**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை, இலங்கை அரச நூலகர் சேவை, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை, இணைந்த சாரதி சேவை, அலுவலகப் பணியாளர் சேவை**

எனது சம இலக்க மற்றும் 2024.10.18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட 2025 வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகள் மற்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மீது தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி இடமாற்ற முன்மொழிவுகள் தொடர்பாக என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட விடய எடுத்துரைப்புகள் பற்றி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகள் தொகுதி I இன் XVIII ஆம் அத்தியாயத்தின் 254 இன் பிரிவுக்கு அமைவான வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வுக் குழுவின் தீர்மானங்களை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கின்றேன். இதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்த தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டதாக மேலே குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பிலான எனது சம இலக்கமும் 2024.10.18 ஆந் திகதியும் கொண்ட கடிதம் மூலமாக முன்மொழியப்பட்ட 2025 இற்கான வருடாந்த இடமாற்றக் கட்டளைகளை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.

03. மேலும் மீளாய்வுக்குழுவினால் திருத்தியமைக்கப்பட்ட 2025 இற்கான வருடாந்த இடமாற்ற தீர்மானங்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மீளாய்வுக்குழுவின் தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட 2025 வருடாந்த இடமாற்ற அட்டவணையில் உள்ள தீர்மானங்களின் கீழ் உள்ள குழு இலக்கத்தின் கீழ் “மீளாய்வுக்குழு தீர்மானத்தினூடாக வழங்கப்பட்ட இடமாற்றம்” என குறிப்பிடப்பட்டுள்ளமையினை தயவுடன் அறியத்தருகின்றேன்.

**04. இடமாற்றக் கட்டளைகள் தொடர்பிலான மேன்முறையீடுகள்**

(அ)இடமாற்றக் கட்டளைகள் தொடர்பாக அதிருப்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகள் தொகுதி I இன் XVIII ஆம்

அத்தியாயத்தின் 256 இன் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் தங்கள் மேன்முறையீட்டினைச் சமர்ப்பிக்கலாம். மேன்முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு இணையத்தினை அணுகுவதற்கு,

- LGN Wi-Fi வலையமைப்பை பயன்படுத்துவதாயின் http://10.250.1.112:7009 ஊடாகவும்,
- வேறு வலையமைப்புக்கள் மூலம் இணையவசதி வழங்கப்பட்டால் http://43.224.125.68:7009 ஊடாகவும்,

நிகழ்நிலை மென்பொருளை (Online Application) அணுகி, **தமது மேன்முறையீடுகளை 2024.12.06 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அந்த தேதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் நிராகரிக்கப்படும்.**

(ஆ) **மீளாய்வுக் குழுவுக்கு மேன்முறையீட்டினைச் சமர்ப்பித்த உத்தியோகத்தர்கள் மாத்திரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டினைச் சமர்ப்பிக்கமுடியும்**.

(இ)அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் நிகழ்நிலை (Online) முறையினுடாக மேன்முறையீடுகளை சமர்ப்பித்ததன் பின்னர் அதன் வன்பிரதியை தங்கள் **திணைக்களத் தலைவர்கள் ஊடாக** எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அதனுடன் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிரூபிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் இணைத்து அனுப்பி வைக்கவேண்டும்.

**05. வருடாந்த இடமாற்றக் கட்டளைகளை நடைமுறைப்படுத்தல்.**

2025 ஆம் ஆண்டுக்கான இடமாற்றக் கட்டளைகள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்களுக்கு கட்டுப்பட்டதாக, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது குறிப்பிட்ட இடமாற்றக் கட்டளைகளுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். மேலும் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் பெயரின் முன்னால் இடமாற்ற கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி குறிப்பிடப்படாத 2025 வருடாந்த இடமாற்றங்கள் 2025.01.01 ஆந் திகதி முதல் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். அதற்கிணங்க தங்கள் அமைச்சில்/ திணைக்களத்தில் / அலுவலகத்தில் கடமையாற்றும், இடமாற்றம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் **உரிய திகதியில் புதிய சேவை நிலையங்களில் கடமைகளை பொறுப்பேற்கத்தக்கதாக பிரதியீட்டு அலுவலர் வரும்வரை தடுத்துவைக்காமல் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

06. வருடாந்த இடமாற்ற கட்டளையொன்றின் படி இடமாற்ற கட்டளையை பெற்றுள்ள அலுவலர் ஒருவர் புதிய சேவை நிலையத்துக்கு வருகை தராமல் இருக்குமிடத்து அவ்வலுவலர் இடமாற்றம் செய்யப்பட்ட திணைக்களத்தின்/ சேவை நிலையத்தின் தலைவரினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் தொகுதி I இன் XVIII ஆம் அத்தியாயத்தின் 256 இன் பிரிவு மற்றும் XV ஆம் அத்தியாயத்திற்கமைய அலுவலர் தானாகவே பதவியை விட்டு விலகியதாக கருத வேண்டுமென அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்திருப்பதால் அதற்கமைய நடவடிக்கை எடுத்து அதுபற்றி எனக்கு அறிவித்தல் வேண்டும்.

07. **2025** வருடாந்த இடமாற்றக் கட்டளைக்கிணங்க புதிய சேவை நிலையங்களுக்கு கடமைக்காக அறிக்கையிடுகின்ற உத்தியோகத்தர்களினதும், விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினதும் விபரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இ.சே/வ.இ.மா/07 மற்றும் இ.சே/வ.இ.மா/08 மாதிரிப் படிவங்கள் மூலமாக **இடமாற்றம் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து 2 மாதத்திற்குள்** எனக்கு அறிக்கையிடல் வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவைக்குச் சமூகமளித்தமைக்கான மற்றும் விடுவிக்கப்பட்டமைக்கான கடிதங்களின் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். (இ.சே/வ.இ.மா/05 மற்றும் இ.சே/வ.இ.மா/06)

08. 2025 வருடாந்த இடமாற்றங்களின் கீழ் என்னால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றக் கட்டளைகளுக்கு மேலதிகமாக, அமைச்சு அல்லது திணைக்கள உள்ளக இடமாற்ற கட்டளைகளின் கீழ் எவரேனும் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற உத்தரவு கிடைத்திருந்தாலும், இந்த மீளாய்வுக்குழு தீர்மானங்களின் திருத்தங்களுக்கு உட்பட்டு 2024.10.18 ஆந் திகதிய வருடாந்த இடமாற்றக்கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதனை கருத்தில் கொள்ளவும்.

09. மேலும், 2025 வருடாந்த இடமாற்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்தும் பொழுது அமைச்சுக்களின் மாற்றம் காரணமாக எவரேனும் ஒரு உத்தியோகத்தருக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டிய சேவை நிலையம் தொடர்பாக சிக்கல்கள் ஏற்பட்டால், அத்தகைய சந்தர்ப்பங்களில் **குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு பிரதியீட்டு அலுவலராக குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரின் சேவை நிலையம் குறிப்பிட்ட உத்தியோகத்தரின் புதிய சேவை நிலையமாக வேண்டுமென்பதைக் கருத்திற் கொள்ளவும்.**

10. அவ்வாறே, தங்கள் நிறுவனத்தில் / திணைக்களத்தில் / அலுவலகத்திலுள்ள இணைந்த சேவைகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத, 2025 வருடாந்த இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படாத 2024 இற்கான வருடாந்த இடமாற்ற கட்டளைகளை தாமதமின்றி நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஒப்பம்/ ஆர்.எம்.என்.ஈ.கே. ரணசிங்க

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் (பதில்)

தொலைபேசி இல. : 011 2694560

ஃபக்ஸ் : 011 2692254

மின்னஞ்சல் முகவரி : dgcs.pubad@gmail.com